இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 27.03.2026


# அ.தி.மு.க. அறிக்கையின் அபத்தங்கள்!

அறிக்கை என்ற பெயரால் அபத்தக் களஞ்சியத்தை வெளியிட்டு விட்டுப் போயிருக்கிறார் பழனிசாமி. ‘உண்மை, உழைப்பு, உயர்வு என்று நடைபோடும் கடைசித் தொண்டனாம்’ எடப்பாடி பழனிசாமி. தன்னைத் தானே சொல்லிக் கொள்கிறார். அவர் யாருக்கு உண்மையாக இருந்தார். தனக்குப் பதவி கொடுத்த சசிகலாவுக்குக் கூட உண்மையாக இல்லை. ‘நீ ஏன் கட்சியை சொந்தம் கொண்டாடுகிறாய்? எனக்கு பதவி வாங்கிக் கொடுத்தாயா?’ என்று ஒருமையில் கேட்ட பச்சோந்திதான் பழனிசாமி. இதனை அ.தி.மு.க. தொண்டர்கள் அத்தனை பேரும் உணர்வார்கள்.

இவரைப் பற்றி ஜெயலலிதாவுக்கே நன்கு தெரியும். அதனால் தான் பல முறை அவரது பதவியை ஜெயலலிதாவே பறித்துள்ளார். 1990 ஆம் ஆண்டு சேலம் மாவட்டச்செயலாளர் ஆன பழனிசாமியின் பதவியை சில ஆண்டுகளிலேயே ஜெயலலிதா பறித்தார். சேலம் புறநகர் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் பதவி பழனிச்சாமிக்குத் தரப்பட்டது. சில ஆண்டுகளில் அதுவும் பறிக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் ஆனார் பழனிசாமி. சில ஆண்டுகளில் அந்தப்பதவியும் ஜெயலலிதாவால் பறிக்கப் பட்டது. 2008 இல் மீண்டும் பதவி தரப்பட்டது. அது மீண்டும் பறிக்கப்பட்டது. பழனிசாமியிடம் உண்மையும் கிடையாது, உழைப்பும் கிடையாது, வெறும் பிழைப்புதான் உண்டு என்பதை ஜெயலலிதா அறிவார். இதெல்லாம் அ.தி.மு.க. தொண்டர்களுக்கு நன்கு தெரியும். அதனால்தான் இவரது தலைமையை அ.தி.மு.க. தொண்டர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கவில்லை.

‘அ.தி.மு.க.வை கட்டிக் காத்தாராம்’. இதையே அவர் சொல்லிக் கொள்கிறார். ஜெயலலிதா காலத்து அ.தி.மு.க. இன்று இருக்கிறதா?

**2019 - நாடாளுமன்றத் தேர்தல், 2019 - சட்டமன்ற இடைத்தேர்தல், 2019 ஆம் ஆண்டில் 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 - ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 - தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், 2022 - நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2023 - ஈரோடு இடைத்தேர்தல், 2024 - நாடாளுமன்றத் தேர்தல், 2024 - விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தல் - ஆகிய அனைத்துத் தேர்தலிலும் தோற்றவர் தான் பழனிசாமி.**

அதிலும் குறிப்பாக நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வை அதல பாதாளத்துக்குக் கொண்டு போய் போட்டார் பழனிசாமி. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதியிலும் தோற்றவர்தான் பழனிசாமி. தென் சென்னை, கன்னியாகுமரி, ராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, நெல்லை, வேலூர் ஆகிய 7 தொகுதியில் அவருக்கு டெபாசிட் போய்விட்டது. 12 தொகுதியில் மூன்றாவது இடத்துக்கு பழனிசாமியின் கட்சி போனது. கன்னியாகுமரி தொகுதியில் நான்காவது இடம் போனது பழனிசாமியின் கட்சி. இவர் தான் அ.தி.மு.க.வை காத்தேன் என்கிறார். ஒருவேளை அ.தி.மு.க. தலைமைக் கழகத்தை மிச்சம் வைத்திருப்பதால் அ.தி.மு.க.வைக் காத்தேன் என்கிறாரா?

‘இயன்றதைச் செய்வோம் இல்லாதவர்க்கே’ என்பது இவரது இலட்சியமாம். இவர் முதலமைச்சராக இருந்த போது இல்லாதவர்க்கு ஏதாவது செய்திருப்பாரா? தனது சம்மந்திக்கு செய்தார். சம்மந்தியின் சம்மந்திக்கு செய்தார். மற்றபடி இல்லாதவருக்கு ஏதும் செய்ததாக யாரும் இதுவரை சொல்லவில்லை. 2016 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதையாவது நிறைவேற்றினார்களா? என்றால் அதுவும் இல்லை.

**எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில் அபத்தத்தின் உச்சம் என்பது, ‘மத்தியில் யார் ஆட்சியில் இருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. அவர்கள் மூலம் தமிழக மக்களின் நலனுக்காக திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டும் என்பதே எங்கள் லட்சியம்’ என்று சொல்லி இருப்பதுதான். பா.ஜ.க.வுக்கு பாதம் தாங்கி வரும் பழனிசாமி, அப்படி எத்தனை திட்டத்தை ஒன்றிய அரசிடம் பேசி தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்தார்? மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை சீக்கிரம் கட்டித் திறங்கள் என்றாவது ஒரு வார்த்தை சொல்லி இருப்பாரா?**

**யார் ஆட்சியில் இருக்கிறார்கள் என்பதுதானே முக்கியம்? பா.ஜ.க., பழனிசாமிக்கு நன்மை செய்திருக்கலாம். அவரையும் அவரது மாஜிக்களையும் உறவினர்களையும் ஊழல் வழக்குகளில் இருந்து காப்பாற்றி இருக்கலாம். புலனாய்வு அமைப்புகளின் பிடியில் இருந்து விடுவித்து இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசால் ஒரு செப்படிகூட லாபம் இல்லை. நன்மை செய்யவில்லை என்பதை பா.ஜ.க.வே அறியும். மற்ற மாநிலங்களுக்காவது தேர்தல் நேரத்தில் திட்டங்கள் அறிவிப்பார்கள். ஆனால் தமிழ்நாட்டுக்கு தேர்தல் நேரத்தில் கூட அறிவிப்பது இல்லை. தமிழ்நாடு என்றதும் கல் நெஞ்சாக அவர்களுக்கு மாறிவிடும். அத்தகைய பா.ஜ.க.விடம் கூட்டுச் சேர்ந்து நன்மை செய்யப் போகிறாராம் பழனிசாமி.**

**‘மாநிலங்களுக்கு உரிய நிதி தர வேண்டும்’ என்று ஒன்றிய அரசிடம் இப்போது கோரிக்கை வைக்கும் பழனிசாமி, ஐந்தாண்டு காலம் முறையாக நிதி தராத ஒன்றிய அரசை ஒருமுறையாவது கேட்டிருப்பாரா?**

**“இந்த இயக்கத்திற்கு தனிக் கொள்கைகள் உண்டு. மதச்சார்பின்மை, மனிதநேயம், ஏழை எளியோர் மேம்பாடு, சமூக நீதி, சமத்துவம், சிறுபான்மையினர் பாதுகாப்பு போன்றவை எங்களின் உயிர்நாடி. அவற்றில் எந்தச் சமரசமும் செய்து கொள்ள மாட்டோம். அதன்படியே நாங்கள் செயல்படுகிறோம். தொடர்ந்து செயல்படுவோம்” என்று சொல்வதற்கு வெட்கமாக இல்லையா? குடியுரிமைச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தது யார்? இந்தியா முழுவதும் இசுலாமியர்கள் அந்தச் சட்டத்துக்கு எதிராகப் போராடிய போது, ‘எந்த முஸ்லிம் பாதிக்கப்பட்டார்? காட்டுங்கள்’ என்று கேட்டவர்தான் பழனிசாமி. போராடிய இஸ்லாமியர் மீது தடியடித் தாக்குதலை நடத்தியவர்தான் பழனிசாமி.**

“நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளித்தார்கள், கடன் சுமையில் தள்ளினார்கள்” என்கிறது அறிக்கை. ஆனால் தி.மு.க.வின் வாக்குறுதிகளைத்தான் பழனிசாமி கொடுத்துக் கொண்டு இருக்கிறார். மகளிர் உரிமைத் தொகை, கனவு இல்லம், விடியல் பயணம் என்று ‘திராவிட மாடல்’ அரசு எதையெல்லாம் செய்து வருகிறதோ, அதையே காப்பி அடித்து சொல்லிக் கொண்டு இருக்கிறார் பழனிசாமி. ‘எப்படி இத்தனை திட்டங்களை நிறைவேற்றுவீர்கள்?’ என்று கேட்டால், ‘வரியை ஏற்றுவோம்’ என்று சொன்ன பொருளாதார மேதை தான் பழனிசாமி.

**‘நாம்தான் ஆட்சிக்கு வரப்போவது இல்லை, வாய்க்கு வந்ததை அடித்து விடுவோம்’ என்று அபத்தக் குவியலாக ஒரு அறிக்கையை தயாரித்து வெளியிட்டுள்ளார், மக்களிடம் இருந்து தோல்வியை மட்டுமே பரிசாகப் பெற்று வரும் ‘பக்கா தோல்வி’ பழனிசாமி.**

●●

---

# தோழமை தொடர்வோம்! களத்தினில் வெல்வோம் - ஒன்றாக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!









சென்னை, மார்ச் 27–

**தோழமை தொடர்வோம்! களத்தினில் வெல்வோம் ஒன்றாக என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

● *தோழமைக் கட்சிகளின் விருப்பத்தையும், புதிய கட்சிகள் நம் கூட்டணியில் இணைந்துள்ள சூழலையும் உணர்ந்து ஜனநாயகப்பூர்வமாகத் தொகுதிப் பங்கீட்டை நிறைவு செய்துள்ளோம்!*

● *தோழமை இயக்கங்களுக்கு நான் அளித்துள்ள வெற்றி உத்தரவாதத்தை நிறைவேற்ற உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் உறுதிபூண்டுள்ளதை நேர்காணலில் நன்குணர்ந்தேன்.*

● *234 தொகுதிகளும் நம் தொகுதிகள்தான்! கூட்டணிக் கட்சிகளின் சின்னங்களும் நம் சின்னங்கள்தான்!*

● *#DravidianModel 2.0-விலும் தோழமை தொடர்வோம்! களத்தினில் வெல்வோம்_ ஒன்றாக!*

**இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதியளித்துள்ளார்.**

---

சட்டப் பேரவைத் தேர்தல் 2026

## மாற்றுத்திறனாளிகள் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, மார்ச் 27-

2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் 100 சதவீதம் வாக்களிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பான மாற்றுத்திறனாளிகள் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (25.3.2026) சென்னை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்ட 12,505 மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துதல், வாக்களிப்பது தொடர்பான விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளுவது தொடர்பாக 21 வகையான மாற்றுத்திறனாளிகளின் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

இதில், மாற்றுத்திறனாளிகள் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் செல்வதற்கு ஏதுவான உள் மற்றும் வெளியேறும் வழிகள், சாய்வுதளம் மற்றும் கைப்பிடிகள், வாக்குச்சாவடிகளுக்கு அருகில் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கென பிரத்யேக வாகன நிறுத்துமிடம் அமைத்தல், சக்கர நாற்காலி மற்றும் ஊன்றுகோல் பயன்படுத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற நடைபாதை வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில் தன்னார்வலர்கள் ஏற்பாடு செய்தல், மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான வாக்காளர் உதவி மையம், முதலுதவிப் பெட்டி, ஆம்புலன்ஸ் சேவைகள் ஏற்படுத்துதல், குடிநீர், கழிவறை, வாக்குச்சாவடி நுழைவு வாயிலில் எளிதில் அணுகக் கூடிய வழிகாட்டுதல்கள் மற்றும் அடையாளப் பலகைகள் உள்ளிட்ட தேவையான வசதிகள் அமைத்திட வேண்டும் என தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

---

## வேட்பு மனு தாக்கல் கால அளவு:

### தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு!

சென்னை, மார்ச் 27-

வேட்பு மனு தாக்கல் குறித்து தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு வருமாறு:-

2026ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான அறிவிக்கை வெளியிடும் நாள் 30.03.2026 (திங்கட்கிழமை) முதல் 06.04.2026 (திங்கட்கிழமை) வரை காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம், 1881ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின்கீழ், பொது விடுமுறையாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 31.03.2026 (செவ்வாய்க்கிழமை), 01.04.2026 (புதன்கிழமை), 03.04.2026 (வெள்ளிக்கிழமை) மற்றும் 05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் வேட்புமனு தாக்கல் செய்ய இயலாது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய கடைசி நாள் 06.04.2026 (திங்கட்கிழமை) ஆகும். இவ்வாறு தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

---

## முரசொலி அலுவலக தொலைபேசி எண் மாற்றம்! புதிய எண்

## 044 - 4584 9900

---

# தேர்தலில் வழக்கறிஞர் அணியினர் பணிகள் பாராட்டுக்குரியது!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

*சிவகங்கை, மார்ச் 27 -*

சிவகங்கை மாவட்ட அளவிலான வழக்கறிஞர் அணிசார்பில் அமைக்கப்பட்ட வார்ரூமினை சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் திறந்து வைத்தார்.

மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ். பாஸ்கரன் வார்ரூம் செயல்பாடுகள் குறித்து விளக்கி வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் ஆதி.அழகர்சாமி, வார்ரும் பணிகள் குறித்து பேசினார். வார்ரூமினை திறந்து வைத்து மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது :-

கழகத்தின் சார்பில் கழகத்தலைவர் விருப்பத்தின் பேரில் மாநில வழக்கறிஞர் அணி ஆலோசனையின் பேரில்அமைக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் அணி தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. கழகத்தினருக்கும் வேட்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கேட்கும் அனைத்து பணிகளையும் செவ்வனே செய்து தருகிறது.

சட்ட நுணுக்கங்களையும் சட்டத்தின் வழிகளையும் நமக்கு தெரிந்து கொள்ள வார்ரூம் நல்ல வாய்ப்பாக அமைகிறது. இந்த வார்ரூம் தேர்தல் முடியும் வரை 24மணிநேரமும் செயல்படும். நமக்கு வழக்கறிஞர்கள் நாம் கேட்கும் உதவிகளை செய்து தருவார்கள். மாவட்டத்தில் உள்ள அனைத்து நிர்வாகி கள் வார்ருமை தொடர்பு கொண்டு நமக்கு தேர்தல் தொடர்பான சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொள்ளலாம். நாம் சட்டத்தை மதித்து செயல்பட வேண்டும்.

நமக்கு என்ன சந்தேகங்கள் இருந்தாலும் அதை வார் ரூம் மூலம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். கழகத்தில் பல்வேறு அணிகள் உள்ளது. ஆனால் தேர்தலின் போது வழக்கறிஞர் அணி ஆற்றும் பணி மிகவும் பாராட்டுக்குரியது ஆகும். அவர்கள் பங்களிப்பு தேவையான ஒன்றாக அமைந்துள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் வழக்கறிஞர் அணி அணி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதை கடந்த தேர்தல்களின்போது நேரடியாக பார்த்து உள்ளோம். இன்று முதல் தேர்தல் முடியும்வரை வழக்கறிஞர் அணியினர் கழக நிர்வாகிகள் இணைந்து ஒன்றாக பணியாற்ற வேண்டும். கழக நிர்வாகிகளும் வார்ரூம் சிறப்பாக செயல்பட வழக்கறிஞர் அணிக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்.

மீண்டும் இரண்டாவது முறையாக கழக தலைவர் தளபதி அவர்கள் முதல்வராக வரவேண்டும். கழகம் 7வது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் கழகத்தின் தலைமையான மதச் சார் பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற வேண்டும். அதற்கு வழக்கறிஞர் அணியினர் பாடுபடுவார்கள். அவர்களுடன் சேர்ந்து நாமும் தேர்தல் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞரணி தலைவர் சேது ராமச்சந்திரன், துணைத் தலைவர் செந்தில்குமார், துணை அமைப்பாளர்கள் திருமதி உமாபதி, துரை வேலவன், ஆறுமுகம், கோதண்டராமன், நிர்வாகிகள் நாகூர்கனி, ஆனந்தகுமார், கார்த்தி, முத்துராமலிங்கம், கதிரவன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன், சாய் சுந்தர், ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், பெ.மந்த காளை, தொ.மு.ச. முருகேசன் உட்பட மாவட்டம் முழுவதிலுமிருந்து வழக்கறிஞர்கள் கலந்து கொண்டார்கள். மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ். பாஸ்கரன் தலைமையில் வார்ரூம் பணிகள் மேற்கொள்ளப்படும்.

---

சென்னை

## நந்தனம் அரசினர் கலைக்கல்லூரி 125-ஆம் ஆண்டு விழா!

### பேராசிரியர்கள் பங்கேற்பு!

*சென்னை, மார்ச் 27 -*

சென்னை நந்தனத்தில் உள்ள அரசினர் கலைக்கல்லூரியின் 125வது கல்லூரி ஆண்டு விழா மற்றும் விளையாட்டு அக்கல்லூரியின் அரங்கத்தில் நேற்று (26.3.2026) நடைபெற்றது.

இக்கல்லூரியின் முதல்வர் முனைவர் பேராசிரியர் து.தங்கராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சென்னை பல்கலைக் கழக தொலை தூரக்கல்வி நிறுவனத்தின் மேனாள் முதல்வர் பேராசிரியர் முனைவர் ஆ.சுவாமிநாதன், சென்னை பல்கலைக்கழக வேதியியல் அறிவியல் மற்றும் இயற்பியல் வேதியியல் துறையின் துறைத்தலைவர் பேராசியர் முனைவர் ஏ. முருகன், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு தேசிய அளவில், மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் மாணவியருக்கு பாராட்டுப் பதக்கங்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்கினர்.

தேர்வுக்கட்டுப்பட்டு அலுவலர் பேராசிரியர் முனைவர் கிரிவாசன், பேராசிரியர் செல்லதுரை பேராசிரியர் முனைவர் ஜெயபாலன், பேராசிரியர் முனைவர் சடையமுத்து, முனைவர் பேராசிரியர் திருமதி. சரசுவதி, விளையாட்டுத்துறை தலைவர் முனைவர் திருமதி. ரூபனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதியாக, கல்லூரியின் வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் பீர் முகமது நன்றி உரையாற்றினார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற தமிழர் தேசம் கட்சியின் நிர்வாகிகள் கூட்டத்தில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர்கள் மு.தென்னவன், வ.து.நடராசன், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.